நரிபரி யாக்கிய சம்புவின் பாகத்தை நண்ணியமான்
அரியயன் போற்று மபிராமி தன்னடி யார்க்குமுன்னே
சரியாக நின்று தருக்கஞ்செய் மூடர் தலையைவெட்டி
யெரியா யெரித்து விடுவாள் வராகி யெனுந்தெய்வமே.

வீற்றிருப் பாணவ கோணத்தி லேநம்மை வேண்டுமென்
காத்திருப் பாள்கலி வந்த ணு காமலென் கண்கலக்கம் [று
பார்த்திருப் பாளல்ல வெங்கே யென்றநந்த பசாசையில்
கோத்திருப் பாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே.

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகப்பரிநந்
றவமாரு மெய்யன்பர்க் கேயிடர் சூழுந்தரியலரை
அவமானஞ் செய்யக் கணங்களை யேவு மகோரியிங்கு
நவமாக வந்தெனைக் காக்குந் திரிபுர நாயகியே. (32)

சுப்பிரமணியர்

விஞ்சை.

முருகன் துணை.

சுப்பிரமணியர் விஞ்சை.

காப்பு.

சீர்மேவும் வாலையபி ராமி சூலி
திரிபுரை சங்காரி கௌமாரி வாமி
தார்மேவு மைடசங்காரி துர்க்கை
சாமுண்டி கங்காளி தந்தமைந்தன்
கார்மேவும் அத்திமுக னொற்றைக் கொம்பன்
கருணைதிரு நயனமிரு கமலபாதம்
பார்மேவும் அறுமுகவன் குருமுனிக்குப்
பகரசர்வ விஞ்சைக்குக் காப்பதாமே. 1

சிவ்வழலு முருத்திரனு முருகன்முடியானான்
சேவலதுபுயமாகி மகர திரமானான்
நவ்வினிடவிதிருமார னிடதுபுயமானான்
நற்சத்திவடிவேல னசுரையும்வென்றான்
மவ்வுசிவ்வொடுநவ்வெனுந் திரியெழுத்தை
மசிநசிஎனச்செபித்து உருலட்சமாகில்
வெவ்வுணர்வார்போல வினையகலுமிதுதான்
வேல்முருகர் சர்வசங்காரவிஞ்சை 2

D.87 2533

மேலானகும்பமுனி பெருகவிள்ளும்
வேல்முருகர் சர்வசங்காரவிஞ்சை
வாலாயமாகவொரு பிரம்பில்பாச்சி
வலமிடத்தோள்சிரசிலு மூன்றட்சரத்தையூன்றி
காலாகவருவேகசூரரையும் வெல்லும்
கனிவுகொண்டு லட்சமுருசெபித்த பேர்க்கு
ஆலாலவிஷங்களுமே நாஸ்தியாகும்
அதனில்விஞ்சைக் கின்னம்வரலாறுகேளே 3

கேளுமூன்றெழுத்துருக்கள் பிரம்பிடக்கைகொண்டு
கெவுனமுன்னிவிபூதி தரித்தெதிரேபார்க்கில்
வாளுருவிக்கொலவருவார் மூறிபட்டோடும்
மகாவிஞ்சைதன்னையுமே தகட்டில்க்கீறி
நீளுலட்சம்உருஜெபித்து சிரசிலணிவோற்கு
நேராகவுண்டையம்பு விலகியோடும்
தாளுலவுமிரவுபகல் சயனிக்கும்போது
ரகசுயத்திரியட்சரத்தை மூகத்திலொட்டே. 4

ஒட்டியேதுயின்றிடத்தில் கஞக்காணாது
ஊர்சற்பம்தீண்டாது படுத்துறங்கிபோகும்
முட்டுவேயிற்றுதித்தகர்பம் மரித்தால்வெண்ணை
முனையருகால் மந்திரித்துசிரம்வயிற்றிற்பூச
அட்டபிள்ளைவெளிப்படுஞ் சாகாதுபின்னை
யதுவுமேசுகமாகப் பிறக்குந்தானே
தொருட்டுருட்டிலெத்தனை பேருடன்சென்றாலும்
சுண்டக்காயளவுகல் லோதியந்னே 5

ஓதியகல்பாகுஉருமால் முடிந்துகொண்டு
ஊற்பயணம்போகும்போ தொருவருக்கும்
காதுவிடாச்செந்துக்கள் மிடிப்டாது
கால்பட்டால்கடியாது கால்சுற்றும்

78084

நீதியில்புண்யபுருட னுகக்கேளு
நித்யந்திரியட்சரத்தை நினைவிலுன்னி
சாதகமாய்க்கோடியுருச் செபித்தபேர்கள்
தாளிருக்குமூர்தனிலே விஷமண்டாதே. 6

அண்டாதுயேவல்பில்லி சூனியங்கள்
அணுகாதுநாவேறுங் கண்ணேறுங்கூட
மின்டானபேர்களும் நல்வார்த்தைசொல்வார்
விவரந்துரைந்தெந்திரத்தை சிரசிலணிவோர்க்குப்
பண்டானவினைராச பிளவைவீக்கம்
படுபருவான்சிரங்குஷ்டம் பெரும்வியாதிக்கே
விண்டானஎண்ணெஜலம் விபூதிபிரம்பாலே
வியாதியெல்லாமாரண மூன்றெழுத்தினுலே. 7

எழுத்தெனுமூன்றட்சரத்தின் விஞ்சையின்னம்
யியம்பவேகுருமுனியை நோக்கிவேலர்
வழுத்தவிதுசர்வசங்கார திரியட்சரத்தை
மவுனமுன்னிவட்டஞ்செய் துருப்பெருக்கினோர்கள்
கழுத்துவாய்செவிகன்னம் நெஞ்சிகுய்யம்
கடிதடமிலிஙகவங்கை கால்களோடு
தழுத்தசிகை சிரசில் ரணங் கண்டமாலை
சற்குருவை நினைந்துகொண்டு பிரப்பால்நிவே. 8

நீவி விபூதியுஞ் சலமுந்தரித்லு
நீதமுமிருபோ துட்கொள்ளஎட்டுநாளில்
பாவியர்க்கும் ஆனுலும் நாஸ்தியாகும்
பழவினைக்கூருனுலும் நாஸ்தியாகும்
மாவலுவாம்சடாமுனிபும் பிரமராக்ஷதையும்
மந்திரவாதிதனக்கு வணங்காப்பேயும்
மேவியக்கெந்துக்கிரகம் வேதாளக்கிரசம்
மிகவுமேளச்சச்கிரகம் நவக்கிரகம்குய்யக்கிரகமாமே.

கிரகசௌமாங்கிரகம் அகோரக்கிரகம்
இளர்சந்தியாக்கிரகம் சொலுமாலைக்கிரகம்
கர்வதுட்டக்கிரகங்கள் தொட்டிருந்தால்
தந்தமதுகடித்திருந்த வண்டருக்குந்தானே
வெருவிவிழித்திடுங்கண்ணை மெருட்டிப்பார்த்து
மேல்விழுந்தாத்தவருங் குரியைக்கண்டு
மருவியமூவிஞ்செயுருஞ்சலம் சிரசில்சொரிந்து
மந்திர நீரைப்பிரம்பினால் உச்சியிலேதட்டே. 10

தட்டியேஆயிரத்தெட் டுருச்செபித்து
சங்காரவிபூதியினா லெரியும்போது
சுட்டிடுந் தீவட்டிகொண்டு கொளுத்தினாப்போல்
சோர்ந்து நடுநடுங்கி யழுதுபோறேன்போறேன்
விட்டிடையாவெகுநாளாய்க் கார்த்தேனிந்த
வேளையஞ்சுமாக்கால் நீர்விரைந்துதாரும்
இட்டமதாய்ச்சாப்பிட்டுப் போறேனென்று
சென்றதற்கு அடையாளம் செப்பக்கேளே. 11

செப்புகிறேன்சிதம்பர சக்கரத்தினாலே
தேகமெல்லாங்கட்டுண்டு தியங்கினேனையா
தப்புரைசொல்லேனிதோ போறேனீசன்
தன்மேலேஆணையிட்டுப் போறேனென்று
அப்படியேபோனதற்கு சோதனைகள்கேளு
அருகிருந்தமரத்தினுட கொம்பினூடும்
ஒப்பெரியபெரும்பாரை அம்மிதூக்கி
பேசாமல்வெருண்டுபயந் தோடுந்தானே. 12

ஓடுமொருமுயல்கண்டன் பிரமகண்ட
னுடனுக்குழியாம் குமரகண்டன்மகரகண்டன்
நீடுமொருகருமத்தால் வரும்வியாதிக்கே
நிதம்பஞ்சகவ்வியம் கோமூத்திரத்தினாலும்

கூடுபெர்ருசங்கார மாமிரமுஞ்செய்து
குறையாமல் நிதமுமரை மண்டலமுட்கொடுத்தால்
நாடுமொருவலிப்பகலும் வலிப்புக்கெல்லாம்
ராசனுமுயல்கண்டன் வலிதுதானே. 13

வலிதாகப்போகாட்டால் யீசன்கோலம்
மலத்திலுன்னிவிரித்தசடை வீரப்பல்லும்
நலிவானமகரகுண் டலமுமூன்று
நயனமுருரோமங்கள் அளப்பிரம்பால்
புலியாடையுடுத்திமான் மழுகரத்திலேந்திப்
பூங்கொன்றைமாலையது புனைந்திருக்க
கெலியானமரமனென்று சிந்தையெண்ணி
கேசரிமேல்மூலத்தை வைத்துத்தானே 14

தானே நீருத்தளமா யணிந்துகொண்டு
தான் சிவமாய் மூயல்நோய் பிடித்தான்றன்னை
ஊனென்ற முச்சூட்ச மீன்றெழுத்தை யுன்னி
உதைத்துருக்கள் பிரம்பினலடிக்க நாஸ்தி
காணுறு மும்பாதம் பிடித்தபேர்க்கு
காராவின்பால்நெய்தேன்மூன்றுமொன்ருகக்கூட்டி
கோஞனை சங்காரம் நூருபத்துச்செபித்து
கொடுக்கவொரு திங்களுக்குள் குணமாய்ப் போமே.

போகாதசுரம்வந்து பிடித்துதானல்
புடைக்குமுரம் பிரத்தியிலே நீரதுவுநன்ருய்
வாகான சக்கரத்தில் மூன்றக்ஷரத்தை வரைந்து
வகைதுகையாயிர முருச்செபித்து நீரணிந்து
நாகான பிரம்பையவன் நெற்றியிலேதட்டி
நல்லுருவாயிரம்ஜெபிக்க நகன்றுவிடும் வெப்பு
சாகாத மூலிமூன்றெழுததைச் செப்புத
தகட்டிலே வரைந்தணிய குளிர்சுரமும் விடுமே 16

விட்டுவிடாதாந்திகம் வாயில்விட்டசன்னி
மிகுதத சிததுவிப்பரம கண்டக சன்னி
சட்டமுள்ள கெம்பீரச்சன்னிருததிரனுச்சன்னி
சந்திகச்சன்னிமுதல் பதிமூன்றுக்கும்
திட்டமுள்ள சிதம்பறமூன் றெழுததினையொட்டித
தேனிலிருச்செபிததருளச் சன்னியெல்லாம்நாஸ்தி
கொட்டுடுக்குலவுண்டை பேரிகைமததளம்
கூருபலவாததியங்கள் கிழியதானே 17

கிழியுமூன்றட்சரததை முகததிலொட்டி
கிளருமுரு செபிக்கையிலே கிழிந்துபோகும்
தளருகின்ற மலடியற்குப் புதானுண்டாம்
தநிபசுவின் நெய்யிலுருச்செபிததுததானே
இளகு மொருமாச முண்டாய் கற்ப முண்டாம்
இனிா பசு நெய்யினில் மூன்றுநா ளுருச்செபிதது
பழகு திங்கட் கொருபடியாம் மூன்று திங்கள்
பகர்ந்துண்டால் கந்பமுண்டாம் பாலன் பெருவார்

வாரேரு கொங்கையர்கள் மலடியானல்
மந்திரததால் பஞ்சகவ்வியம் உருசெபிதது
நேராகச் செல்லுமரை மண்டலமுண்டோற்கு
நிமிஷமிது கைகண்ட அவிஷ்த சித்தி
சீராகப் பச்சை மஞ்சள் அரைத்துத்தானே
சிதம்பர மூன்றெழுத்தினை யுச்சரித்ததனைக் குழீக்க
யோராகக்கற்பமுண்டா மிரண்டுமாத
மிசைந்து குழிக்கப் பெறுவர் பதினாறுந்தானே 19

மூன்றெழுத்தின் மகிமையிது பிரணவக்கட்டாம்
மோனமொரு ரீங்கார விஞ்சை முகத்தேயொட்டி
தோன்று ரணகளத்தில் மருமலர்கள்கூடி
தொடுத்தவுண்டை அம்புமுதல்விலகியோடும்

காணுந்திரி யட்சரத்தை யுன்னிச் செபிக்கும்போது
கண்ணெதிரோமப் பதுமங் காட்டுங்காட்டும்
மீன்றிகள் வளர்பொதிகை கும்பமுனி கேட்க
வேலர னுக்ரகஞ்செய் விஞ்சை புண்மை யருளே 20

அருளுகின்ற விஞ்சைதான் ஆருக்கானல்
அரன்மாலைப் பணிந்த தன்மை அறிவுள் ளோர்க்கு
குருவிசுவாசமுடன் நன்றிமறவார்க்கு
குணமிகுந்த பெரியோர்க்கும் கூறலாகும்
மருளுடைய மனத்தோர்க்கும் வஞ்சநெஞ்சலோபர்
மாதர் மேலிச்சைவைத்து வணங்கு வோர்க்கு
பொருளளித்து உயிர்வதைசெய் கல்நெஞ்சோர்க்கும்
பொன்கொகு யீந்தாலும் புகலொண்ணாதே 21

உச்சத்தில் மகாரமாகில், உயர் நடு சிகாரமாகில், பிச்சத்தில் நகாரமாகில், பிறைவட்டஞ் சூலஞ்செய்து; மிச்சத்தில் சித்தரெல்லாம் வினைகளைத் தீர்க்க வேண்டி, பக்ஷத்தில் பகர்மது பார்த்தால் பகர்ந்திடு மக்ஷரங்கள் தானே.

சுப்பிரமணியர்

சிவசெந்திமாலை.

குகமயம்.

சிவசெந்திமாலை.

வெண்பா.

காட்டுவழி போனாலும் கள்ளர் பயமானாலும்
கேட்டுவழி காலனார் கிட்டுகிலும்—நாட்டமுடன்
நம்பிக்கையாக நமக்கு விநாயகனார்
தும்பிக்கையுண்டு துணை.

முருகன் துணை.

செந்தில்வளர் நாயகனே சிவனேயுந்தன்
சீர்பாதம் போற்றிசெய்து சிறப்பாய்ப்பாட
வந்துதமிழ் வாக்கருளும் வாலைத்தாயே
மலரடியை நானடியேன் வருநதிநித்தம்
தந்திரமாய் சடாட்சரத்தைத் தியானஞ்செய்ய
சரஸ்வதியுட சாமுண்டி வீரவாகு
செந்தில்வாழ் விநாயகனே முருகா ஐயா
சீர்பாத மென்னாளுஞ் சரணங்காப்பே 1

ஈசன்மகிழ் பொதிகைமுனி குருவுமாகி
ஈராறு கைதனிலே வேலுமேந்தி
பாசமுடன் மயிலேறி யசுரனைவென்று
பண்பான அமரருட துயரந்தீர்க்குந்
தேசிகனுர் செந்தில்வடி வேலர்மீதில்
தீர்க்கமா யைம்பத்தோர் கவிநான்சொல்ல
மாசிலாப் பரஞ்ஜோதி ஒற்றைக்கொம்பன்
மலரடியை யனுதினமும் வணங்குவோமே 2

காருகந்த மேனியனு மயனுங்காணுர்
கடவுளற்கு உபதேச மருளுமூர்த்தி
வாருகந்த குவிமுலையா ளுமையாளீன்ற
வளர்மணியே செழுஞ்சுடரே மயிற்கடம்பா
தாருகந்த பன்னிரண்டு கையும்வேலுஞ்
ஷண்முகனே உன்னிருதாள் சதங்கைகொஞ்ச
சீருகந்து யெனையாளுமையா வாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 3

அயிலிலங்கச் செழுஞ்சேவல் கொடியும்வாளு
மாருசங்க சூலமழு வழகாயேந்தி
துயிலிலங்குமணி மார்பும் கடப்பமாலுஞ்
ஜோதியொத்த திருமேனி சுயம்பிரகாசம்
ஒயிலிலங்கு நடையழகு முனைகொண்டாட
உன்னிருதாள் சதங்கைகொஞ்ச வுகந்தேவந்து
செயலிலங்க வெனைகாக்க ஐயா வாவா
சிவசிவா செந்திய்வளர் சிவனேபோற்றி 4

முத்துநவ ரத்தினமுடி யசையுமில்லை
முறுவலொரு கனிவாயு முகங்களாறுஞ்
சற்றுகுர மாதுவள்ளி தெய்வானை சூழ
சாவல்மயில் கொடியிலங்க வன்புகூர்ந்து

எத்தேச காலமுந்தன் பாதம்போற்றி
எளியேனுன் தெண்டனிட யென்னை நீகாக்க
சிற்றடியிற் சிலமபு கொஞ்ச ஐயாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 5

கஞ்சமலராணியுந்திரு வுந்திமார்புங்
காதிலிசை குண்டலமுங் கையில்வேலுந்
தஞ்சமென்றோர்க் கருள்புரிய மமுதவாயுஞ்
ஷண்முக னேவுன்னிருதாள் சதங்கைகொஞ்ச
அஞ்சலென் றோடிவந்தடியேன் றன்னைக்காக்க
அழகானமயிலேறி யடியேன்முன்பு
செஞ்சதங்கை கலகலென அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 6

பறம்பொருளே மனோன்மணியாளீன்றெடுத்த
பாக்கியமே மெஞ்ஞான வுபதேசவேதத்
தொழும்பொருளே யிடைபின்கலை சுழியின்மீதில்
துலங்கு நலம்புரிந்தருளுஞ் சுவாமிநாதா
இளம்பொருளே வள்ளியம்மன் தெய்வயானை
யின்பசுகநாயகனே யெளியேனுள்ளஞ்
செழும்பொருளே யென்குருவே சித்தேவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 7

விரிவுறறதோகைமயில் மீதிலேறி
வீரவாகுதம்பிமார் மிக்கவீரர்
அறிவுற்றபூதபடை சூழ்ந்துமேவ
அயல்சேவல்கொடியிலங்க அன்னைக்காவும்
வரிவுற்றவள்ளி அம்மாள் தாய்தெய்வானை
வலமிடமாயெழுந்தருளி மனதுகூர்ந்து
தெரிசித்துநாளைபோற்ற ஐயா வாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோறறி 8

மெய்யுற்றகூர்விழியாள் வள்ளியமமாள்
வேதாந்தமெய்ப்பொருளே அமலநாதா

மெய்யுற்றகூர்விழியாள் வள்ளியம்மாள்
வசிகரசிகாமணியே வாவாயென்முன்
கையுற்றவேல்துலங்க இடைதள்ளாட
கனகபதசிலம்புதண்டை கலீரென்றேமுன்
மெய்யுற்றநான்போற்ற ஐய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 9

கடம்பணிந்தபுயமிலங்க யிடைதள்ளாடி
கரங்கள்பணி ரெண்டிலங்க வயிரமுத்து
வடம்புனைந்த மார்புதனில் குழையிலங்க
மதிமுகமுஞ் சடைமுடியும் பளபளென்ன
நடம்புரிந்த பதந்துலங்க சதங்கைகொஞ்ச
நறுமலர்கள் கமகமென நாயேனுள்ளந்
திடம்புரிந்து யெனையாளு மையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 10

சர்வலோக நாயகனே விஞ்சைமூலத்
தவக்கொழுந்தே மெஞ்ஞான தாயாய் வள்ளி
திருமருவுபாகரனே பாங்கிரியில் சுவாமி
சேர்ந்தவரும் பாலசுப்பிரமணியதேவா
அருணகிரி நீலகண்டர் மனோன்மணியாள்
அருநிறைந்த கண்மணியே அழகேஞான
திரவியமே யென்குருவே சித்தேவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 11

மந்திரஞ்சேர் மெய்ப்பொருளே ஞானமூர்த்தி
வாலையம்மளீன்றெடுத்த மாகதமேமூலந்
தந்திமுகன்றனைப்படைத்த சுவாமிநாதா
சகலசித்துமாடுகின்ற சற்குருவேஞான
சுந்தரமேவள்ளிதெய்வ யானைநேயா
துரந்தரமே சௌந்தரமே துலங்கவெந்தன்
சிந்தைகுடிகொண்டருளும் ஐயாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 12

அழியாதயோகவெளி வீதியாகி
  யகண்டபரிபூரணமாய் வாசியோகஞ்
சுழியாகிசுழிமுனையில் சூட்சமதாகித்
  துலங்குகின்றவித்துவச காலமாகி
ஒளியாகிப் பாஞ்சுடரா யுருவமாகி
  ஒன்றிரண்டாம் மூன்றாக உலகமெங்குந்
தெளிவாக விளையாடு மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 13

கைகொடுத்து மெள்ளமெள்ள வாவாவென்றால்
  கால்தூக்கி நடக்கநடை காட்டியென்னை
பையேனும் நடைவருமோ தூக்கினாலும்
  படுத்திருந்து தாங்குமுன்னே பானேயுந்தன்
மெய்யருளே தான்கட்டி ஞானங்காட்டி
  வித்தைமலர் தான்காட்டி வியாளக்கொண்டு
செய்தவர்க்கு இதுசமயமையவாவா
  சிவசிவாசெந்தில்வளர் சிவனேபோற்றி 14

நலங்கள்பெற ஆறெழுத்தின் பொருளுங்காட்டி
  நடுவில்நின்ற முதலெழுத்தின் பொருளுங்காட்டி
துலங்குகின்ற விதிவாசல் நாலுங்காட்டி
  சூழ்ந்துநின்ற நல்வீரா சொரூபங்காட்டி
இலங்குகின்ற தெய்வானை மயில்சேவல்யேந்தி
  யென்னிருகண் விழிகாணத் தோன்றுதற்கு
சிதங்கைபதந்தனைக்காட்டு மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 15

அன்பருளமேவுகின்ற நாயகனேவாவா
  அரகரா ஆறுமுகசுவாமிவாவா
உம்பர்குடிவாழவந்த நாயகனேவாவா
  ஓம் நமசிவாயகுரு தேசிகனேவாவா
எம்பெருமாளென்சுவாமி நாதாவாவா
  யென்கோவே யெனையாளும் நாயகனேவாவா

தென்பொதிகை முனிபணியு மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 16

காரிலங்குங் கூந்தல்மின்னாள் போகங்காட்டி
  காமயிதழ் சுகங்காட்டிக் கருணைகூர்ந்து
நேரிலங்குந் தமிழ்காட்டி ஞானங்காட்டி
  நினைவிலுமறியாத அருளுநங்காட்டி
தாரிலங்குந் திருமார்புந் தோளுநங்காட்டி
  ஷண்முகமும் பன்னிருகை வேலுங்காட்டி
சீரிலங்கும் பதங்காட்டு மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 17

ஆசையெனும் பேரின்பம் பொருளுநங்காட்டி
  அஞ்செழுத்தினுறெழுத்தி னருளுநங்காட்டி
பூசைசெய்யும் விதிப்படியே முறையுங்காட்டி
  பூரணமாய் பெஞ்ஞானப் பொருளுங்காட்டி
மாசிலாப்பரஞ்சோதி மணிபோலெந்தன்
  மனதிலொன்றும்பிரியாத மௌனங்காட்டி
தேசிகனே யெனையாளு மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 18

உருப்படுத்தி யாளாகிச் யெழுத்தபிள்ளை
  ஓதுதற்கு யிசைக்காட்டி உள்ளொளிக்குள்
பொருந்திஐந்து புலன்களையு மொன்றாய்க்கூட்டி
  பூரணமாய் மெய்ஞ்ஞானப் பொருளுங்கூட்டி
கருத்திலொன்றும் பிரியாம லருளுநங்கூட்டி
  கலவியின்ப சுகங்காட்டி கருணைகூர்ந்து
திருத்தியெனையாட்கொண்ட மையாவாவா
  சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 19

நானுந்தன் பாதமுழுதும் நம்பினேன்வாவா
  நற்கதி தந்தாண்டருள்வாய் நாடி நீயுந்
தானுந்தன் கிருபைசெய்து அருள்புரிவாய்
  தமிழிசையும் விசையுமுற்றும் தந்துகார்ப்பாய்

மானீன்ற பூங்கொடியாள் கானில்வள்ளி
மாதுதெள்ளி கொடுக்குந் தினைமாவின்மிக்க
தேனுண்டகனிவாயா அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 20

வாடுகின்றமெய்ப்பொருளே அய்யாவாவா
பாக்கியமே மெஞ்ஞான பவுசேவாவா
நாடுகின்ற யென்குருவே சாமீவாவா
நாதாந்தவஷனியாள் பாலாவாவா
ஆடுகின்ற நாதாந்தப பொருளேவாவா
ஆச்சரிய வருள்புரியு மடியேனுள்ளே
தேடுகின்ற மெய்ப்பொருளே ஐயாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 21

உன்பதத்தைக்காணாத விழிதானென்ன
உன்செயலைப்பாடாத வாய்தானென்ன
அன்புடனேயுனை துதியாச் சிந்தையென்ன
அனுதினமுஞ் சேவைசெய்யாக் கைதானென்ன
நம்மனைத்தியானஞ்செய்யா மனந்தானென்ன
நாயுடலை வளர்த்துமென்ன யிருந்துமென்ன
தென்பொதிகை முனிபணியு மைய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 22

சுப்பய்யா என்சுவாமி வாவாயென்று
துதிக்கமிக வடிபணிந்து அழைத்தவேளை
அப்பய்யா யென்முன்னே வருவதற்கு
ஆயாசமேது சொல்லும் மடியேனுன்னை
எப்பய்யா மறந்திருந்தேன் குறைகளேது
இதுவே அறிந்ததில்லை யெனக்கே அன்பாய்
செப்பய்யா வாய்திறந்து அய்யா பாலா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 23

விரிகமலோன் பரவுகின்ற விமலாவாவா
வேதாந்தமெஞ்ஞான விசாகாவாவா
பரிபுரவனொளியேதம் பரனேவாவா
பரமகுருசாமிகந்த சுவாமி வாவா
அரிநமசிவாயமெனும் பொருளேவாவா
ஆறெழுத்தில் அமர்ந்தருளு மறுமுகனே வாவா
திரிபுரதாண்டவராய அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 24

அப்பனேவா சற்குருவாம் அண்ணலேவாவா
அக்குமிங்குமாய்நிறைந்த வழகேவாவா
சுப்பய்யாவாமுத்தய்யாவா துரந்தராவாவா
சுத்தரியாளீன்றெடுத்த துரையேவாவா
யிப்பவாயிங்குவா யென்முன்னேவாவா
யெளியேனைக்காத்தருளுஞ் சுவாமிாவவா
செப்பரியமுன்பொருளே யென்னையாளவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 25

அலங்காரவிமதிசூழ் மலையுஞ்சார்பும்
வமுர்தந்திசுத்திவரு மல்லிதேசம்
யிலங்குகின்ற மார்த்தூரில் நடுவேகம்பம்
யெட்டிரண்டுஞ் சுகர்த்துவைத்தவட்டவீடு
துலங்குகின்ற மேல்வாசல் துணிந்தவீடு
தூக்கியிருகால்பாதந் தொந்தோமென்று
சதங்கைபதந்தனைக்காட்டி அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 26

அன்னையும்நீ தந்தையுநீ யென்னையாளுநுஞ்
சற்குருநீ வென்றழைத்தால் தமியேன் முன்னே
வந்ததினாலுன் குலத்தில் தாட்சியாமோ
வாராபலிருப்பதற்கு வழக்கேதுண்டோ

யெந்தனுக்கு சேனையுண்டோ வுனைப்பிடித்து
வெளியேன் முன்கொண்டுவரதொந்தையோசொல்
செந்திநகர்தனில்வாழு மையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 27

எடுத்தமுறை தவருமலிருக்கவேணும்
யெங்கிலுமுன் செந்தமிழைப் பாடவேணும்
தடுத்தோரைவாயடக்கச் செய்யவேணும்
சடாட்சரத்தில் வுன்பெருமை நாட்டவேணும்
அடுத்தோறகு வுன்செயலைக் காட்டவேணும்
அனுதினமும் பாதமலர் சூட்டவேணுந்
திடத்துடனே யெனையாளுமையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 28

முப்பொருளே தர்ப்பரமே யகண்டவீதி
முடியிளங்குகோமளமே முதலென்கோவே
அப்பனேவாவென்று கெஞ்சி யழைப்ப தல்லால்
அதட்டிவழைப்பதுண்டோ ஆர்தான்சொல்லும்
இப்படியாய்த் திருப்பரங்குன்றதேசா
யிரக்கமது கிருபைவைத்து யெளியேனுன்மேல்
செப்புதமிழ்க்கண்டுகந்து அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 29

என்மனது வாடுவதுகண்டிருந்து
யெவற்குவந்த விருந்தெனவே இருக்கலாமோ
உன்மனது கல்லோதா னிரக்கொணுதோ
வோதுதமிழ்கேட்கிலையோ உலகமெல்லாந்
தன்மனது நீயாமோ நான்தானுன்மேல்
தானினைத்த சித்துதந்து ரட்சிவையா
தென்பொதிகை முனிபணியு மையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 30

நீவாவாகாத்தருள வெளியேனுள்ளம்
நினைத்தவாமருள் புரிவாய் நீதானப்பா

தாய்வரவா சுவாமிநீ வாவாவென்று
தமியேன் கைக்குதவிதந்து ரட்சியையா
வாவென்றழைத்தால் வநதென்முன்னே
வாராதங்கிருப்பதற்கு வழக்கேதுண்டோ
தேவாதி தேவாவா அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 31

பரமனருள் நாயகனே வாவா வாலைப்
பார்வதியாள் பாலகனே வாவா யெங்குஞ்
சர்வவுயிர் நாயகனே வாவாசித்துத்
தமிழ்சொரியும் நாயகனே வாவாவுந்தன்
கருணைபுரி நாயகனே வாவாயென்னை
காத்தருளும் நாயகனே வாவா யெந்தன்
திருவருள்செய் நாயகனே அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 32

ஏனய்யா யென்மீதில் மோடிவேண்டாம்
யேழையல்லோ பாலனல்லோ யெளியேன்யானும்
நானய்யாவுந்தனிரு பாதம்போற்றி
நாதனே வாவென்றழைத்தால் நாயேன்முன்னே
தானய்யாமுன்தோன்றி யருள்புரிந்து
தற்காத்துரட்சிவள்ளி தாயாள் தந்தை
தேனையா யுண்டகனி அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 33

நானென்ற வல்லபத்தை தீர்க்கவேணும்
நாடியான சுழிமுனையை நோக்கவேணும்
தானென்றவன்பொருளை யாக்கவேணும்
சாகாமல் சற்றுமனங் கிடைக்கவேணும்
வாவென்ற தொனியொளிதான் தோணவேணும்
வடிவேலுமயிலுநான் காணவேணும்
தேனுண்டவாயனே அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 34

பரந்துநின்ற யென்மனத்தைத் திருத்தவேணும்
பலர்முகம பார்த்துருகாம லிருக்கவேணும்
உறைந்தெழுந்த ஆங்கார மொடுங்கவேணும
உண்மைதனில் மெளனமெலா மடங்கவேணும்
நிறைந்த சடாட்சரமுமனம் நாடவேணும்
நீங்காமற் கருணைபொழிந் தாடவேணும்
சிறந்திடவே யிட்சணம்நீ அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 35

ஆக்கை நரம்பெலும்புதசை உதிரம்சிந்தி
ஐம்புலன்க ளோடுமுன்னே அய்யாவுன்னை
பார்க்கவேணும் கண்குளிர முகங்களாறும்
பன்னிரண்டு புயமார்புங் கடம்புஞ் செய்கை
ஏற்கமயில் சேவல் வள்ளி தெய்வயானை
இலக்ஷசத்தி வேல்வீர வாகுவீரர்
சீக்கிரமா யெந்தன் முன்னே அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 36

ஆடுகின்ற பரஞ்ஜோதி மணியேநான்கும்
அறுமறைக்கு வல்லவனே அமுதே ஆறு
வீடுநின்றுவிளங்கு பரஞ்சுடரே ஞான
விளக்கொளியே வேதாந்த வேதமூர்த்தி
கூடநின்றுவிளையாட மனதுகூர்ந்து
கோலமயில் மீதேறிவருவா யென்று
தேடுகின்ற யெளியேன்முன் னய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 37

நாவாலும் மனத்தாலுந் தியானத்தாலும்
நம்மாலும் தமிழாலும் நாடி நாடி
வாவாவென் றளிக்கவரா திருப்பதுண்டோ
மனதிறங்கி அடியேன்முன் வாவா சுவாமி
நாவாலே வுனைத்துதித்து உலகத்தோர்கள்
நசுவுபெற் றெண்ணுலுமுந்தன் பாதங்காண

தேவாயெனு மையாவென் னய்யாவாவர்
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 38

நாட்டமுற்றேனுன்மீதி லன்புவைத்து
நானழைத்தால் வருவதற்கு நீயேன்முன்னே
கோட்டையுண்டோ வழியுண்டோ வழிதோணாதோ
கூப்பிட்டால் தமிழோசை செவிகேளாதோ
வாட்டமுற்று நான்மயங்க லாமோ நீதான்
மனதிரங்கி அடியேன்முன் மகிழ்ச்சிகூர்ந்து
தேட்டமுற்றேனும்பதத்தி லன்புவைத்து
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 39

யேகமுற்ற பாஞ்சுடரே ஞானமூர்த்தி
யெந்தையே பொதிகைவரை யிருக்கும்நாதா
ஆகமுற்றசெழுங்கனியே யேழைக்கேற்ற
அப்பனே யெனைமுழுதும் ஆண்டசாமி
தகமுற்று முனைத்தேடி வருந்துகின்ற
தமியன்முன்வாவேணும் சமையமையா
தேகசித்தி தந்தருளும் அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி 40.

வச்சிரவேலேந்து மீருர்காமுந்தோளும்
மணிமுடியுங் குண்டலமும் மயிலும்சேவல்
கச்சிடையும் வச்சிரமும் மிலங்குமார்பும்
காதிலிடுங் குண்டலமும் கையும்வேலும்
தற்சொருபந்தன்னைக்காட்டி யெளியேன்கண்கள்
தறித்துன் மிசைத்ததெல்லாம் தருவாய்வேலா
தெட்சணையணப்பரவு மய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 41

குருவருளையென்னாளும் நோக்கவேணும்
கோபமென்றமுனையதனைப் போக்கவேணும
கருவியருள் மாய்கைவலை நீக்கவேணும்
காலடியே நாடிமனந் தூக்கவேணும்

அரகரா சிவசுப்ர மணியாவென்று
அநுதினமும் மலர்ப்பதத்தைக்காணவேணும்
திருவருள் தந்தெனையாளு மையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 42

அடங்காமலோடுகின்ற பேய்மனத்துக்
கருள்காட்டி அரவணைத்து அன்பாய்ஞான
வடம்பூட்டி பிடித்திருக்கி யரிவவன்றேந்து
மாணிக்க கப்பத்தோடே வரிந்துசேர்ந்து
உடங்கொள்ளும்படியா யீறெழுத்தால்முட்டி
யொடுங்கிநின்றே னுளந்தனிலே யுகந்தென்னுளும்
திடங்காணும்படிக் கருள்செய் அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 43

நாசி செவி கண்மூக்நப் புருவமையா
நடுவிலொரு நாசியிடை பின்கலையான
நாசியெனுஞ்சுழிமூனைக்கு நீங்காவட்டம்
வட்டமதில்மேல்வீடு மௌனவாசல்
ஓசைநடம் புரிந்தருளும் பதமும்காட்டி
யுன்கிருபை செயல்காட்டி யுகந்தோமென்று
தேசிகனே யெனையாளு மையாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 44

உன்கிருபை சொலவெனக்குத் தூரவும் வேணும்
ஊர்வழி துணையெனக்கு வரவும் வேணும்
யெங்கிலுமுன் செந்தமிழைப் பாடவேணும்
யெதிர்த்தோரை வாயடக்கிப் போடவேணும்
அங்கிலும்நீ நின்றுவிளை யாடவேணும்
அநுதினமும் மலர்பதத்தைச் சூடவேணும்
செங்கையிலே வேலிலங்க அய்யா லாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 45

மடம்பொருளே யிதுவென்ன மாயவாழ்வு
மான்பொருளென் றெண்ணிலேன் தமியேனுந்தன்

நடம்பொருளே தான்பாரா திருந்ததாகில்
நானுமெங்கே செல்வதினி நாயகனேசொல்
இடம்பொருளேவல்தந்து நான்தாவென்று
என்னாளும் நினைத்தசித்தி யின்பங்காட்டி
திடம்பொருளே தந்துதவும் அய்யாவாவா
சிவசிவா செந்திலவளர் சிவனேபோற்றீ 64

ஓசைகொண்ட சதங்கை தண்டை சிலம்பு கொஞ்ச
யுகந்து நடம்புரிந்தபத முன்னே,நாட்டி
ஆசைகொண்டு வருந்தியுனை நினைத்தேன்காண
அய்யனே வாவென்று யழைப்பதல்லால்
ஏசிலப்புகொண்டுமெள்ள யிங்குவாவென்
றேசவினைப் பிடித்தடிக்க வெண்ணிலேகாண
தேசமெங்கு நிறைந்தருளு மய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 47

நவிலுமென் செந்தமிழைப் பாடவேணும்
நாடோறு முன்பாதங் கொண்டாடவேணும்
ஏவல்செய்து தேவதைகள் நிற்கவேணும்
யெனாளும் வீரர்சுத்தி கார்க்கவேணும்
வசியமாய் வள்ளியம்ம னிடத்தெய்வானை
மலர்பாதம் நீங்காமல் நிற்கவேணும்
சேவற்கொண்ட மயிலிலங்க அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 48

தங்கமுடி சூடுநின்ற பரனே போற்றி
சகலகலைவல்லவனே சுவாமி போற்றி
திங்கள்முடி நஞ்சுடையார் பாலா போற்றி
செகசூட்சி வுமையவள் கண்மணியே போற்றி
செங்கை வடிவேலவனே கடம்பா போற்றி
செகமெல்லா முண்டருள்மால் மருகா போற்றி
மங்கைவள்ளி தெய்வானை மருளா போற்றி
மயூரகிரி தனிலுறைப் போற்றி போற்றி 49

அத்தனருள் பரமகுரு சுவாமி வாவா
அங்கயற்கண் புத்திரனே அய்யா வாவா
முத்திதரும் குமரகுரு மூர்த்தி வாவா
முத்தையா நால்வேதம் முதலேவாவா
பத்தர்மனதியானவள்ளி பாங்காவாவா
பச்சைமயில் வாகனனே பரனே வாவா
சத்திமுனிவோர் பணியுங் குகனே வாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி 50

ஆதியாயுலகெங்கும் நிறைந்தஜோதி
அன்பத்தோரட்சரத்தின் னிறைந்தஜோதி
ஓதுகின்ற செந்தமிழின் குருவேஜோதி
ஓங்காரமானயெழுத் துகந்தஜோதி
நீதியாம் சடாட்சரத்துள் ளாடும்ஜோதி
நிஷ்களானந்தபர மானஜோதி
ஜாதிபலபேத மெல்லாம் சமயமோதி
சமயமிதுவந்தென்னை காத்தருள்வாய்ஜோதி 51

ஆராரு ஆய்மூன்று கவிஞன் சொல்லி
ஆராதனைசெய்ய அடியேன்முன்னே
மாராதவேலுபணி றெண்டுகையும்
வள்ளிதெய்வானையோடு மயில்மீதேறி
காராத பரஞ்சிலம்பு கலீரென்றோடே
கலிகூத்துவுந்தனிரு பாதம்போற்றி
தீராதநோய் தீர்க்கும் அய்யாவாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனேபோற்றி. 52

இடும்பன் கடம்பன்

வசியம்.

உ

கடவுள் துணை.

இடும்பன் கவசம்.

காப்பு.

இடும்ப லிடும்பைக ளீடழிக்க வந்த
இடும்பன் கவச மிது.

நூல்.

ஓம் அகத்தியர்சிஷா அறுமுகன்தூதா
அடியேன்வல்வினை யகற்றிடவருவாய்
செகத்தினிலெங்கும் சிறந்துநின்றவனே
தகதகதகவென சாரிநீவருவாய்
அண்டமும்பிண்டமும அதிரவேவருவாய்
மண்டலம்புகழ வருவாய்கடம்பா
தண்டாயுதமுந் தனிநீற்றுநெற்றியும்
வண்டார்கடம்பா வரவேசமயம
கண்டமுமார்புங் கரமிடையழகும்
அண்டர்கள்போற்று மாயுதவழகும்
எண்டிசையதிரவே யேறியமிதியடி
தண்டையுங்கொலுசுஞ் சரமுடனழகும்
அண்டர்கள்போற்றிய வாயுதவழகும்
தண்டாயுதத்தொடு தாண்டி நீவருவாய்
வருவாய்வருவாய் வல்லிடும்பேசா
வருவாய்பழனி மலைக்குக்காவலா
இவ்வுச்சவ்வும் ஈசனே அரனே
அவ்வும்மவ்வும் ஆகியபரனே
சவ்வும்கிலியும் ஐயுமானவனே
அவ்வும்உவ்வு மாகியகோவே
குறத்திமகனே குறவன்குமரா
மறத்திமகனே வல்லிடும்பேசா

ஆறுமாமுகத்தெம் மண்ணல்தன் றுணையே
வீறுடைத்தேவர் வேண்டும்பொருளே
இருப்புத்தடியு மிருகைவல்லயமும்
சுருட்டுவாளுந் தொங்தசங்கிலியும்
எடுத்துவரவே இதுவேசமயம்
ராராராரா நாயகவிடும்பா
ராரா ராரா நமனுநடுங்க
றீராறீரா றீங்காரசொரூபா
வாராய்வாராய் வல்லிடும்பேசா
வள்ளியம்மைதன் மைந்தனேராரா
துள்ளியநடையுந் துண்டுத்தடியொடு
முள்ளுமிதியடி முனைமேல்நின்று
சமையந்துரையே சடுதியில்வருவாய்
சமயமிதுவே தமியனைரக்ஷியும்
உபயதாண்மல ருண்மையாய்நம்பினேன்
அபயமரசே அடியனைக்காக்க
ஓங்காரத்துடன் ஒலிக்கும்திங்காரா
ஆங்காரத்துட னுர்ப்பறித்தெழுந்து
ஜல்லடங்கட்டியே சாமிநீவருவாய்
பில்லிசூனியம பெலத்தவல்கள்
துள்ளியசடாமுனி சோதிபாவாடையும்
பள்ளக்கருப்பன் சாமுண்டிசாத்தான்
பள்ளவீரன் பத்திரகாளியும்
மசானக்கரையில் வாழ்ந்திடும்பிசாசும்
பிசாசினுக்கெல்லாம் பெருந்தலைமுனியும
கருத்தஇருளன் காட்டேரியக்ஷணி
உருத்துப்பார்க்கும் உக்கிரமுனிகளும்
கொள்ளியதேளுக் கொடுவிஷப்பாம்பும்
பலவிடமெல்லாம் பரிந்திடவெரித்து
பட்டுபட்டு பாந்திடஎரிவரி
வெட்டுவெட்டு வேரைக்களைந்திடு

முட்டுமுட்டு முடுகியேமுட்டு
கொட்டுகொட்டு கூறிடக்கொட்டு
கட்டுகட்டு கடுகவேகட்டு
கட்டுகட்டென் மாற்றானைக்கட்டு
குத்துகுத்துன் கூர்வேன் முனையால்
பற்றுபற்றுபறிந்திட்டோட
கண்விழிபிதுங்கிக் கலங்கிடஎரிஎரி
விண்ணோர்புகழும் வேலவர்தூதா
எரிஎரிஎரிஎரி இரணக்களம்போல
பரிபரிபரிபரி பாசக்கயிற்றால்
முறிமுறிமுறிமுறி மூன்றுதுண்டாக்கிடு
படுபடுபடுபடு பல்லைப்பிடுங்கிடு
அடிஅடிபிடிபிடி இடிஇடிசுடுசுடு
பார்த்திடும்பேர்களைப் பார்வையறுத்திடு
சத்துருநாசனத் தணலெரிமூட்டி
புத்திரனழைக்க புநித நீவருவாய்
எங்கிருந்தாலு மென்னெதிர்வருவாய்
எங்கிருந்தாலு மென்னெதிரியையடக்குக
சங்கிலிபூட்டிச் சதைத்திடுஎதிரியை
துங்கமாமயிலோன் றூதாவாவா
ஐயாஇடும்ப அறுமுகத்தூதா
வையாபுரியில் வளர்ந்துநின்றவனே
வடிவேல்வாசா மந்திரிவருவாய்
அடியேனழைக்க அன்புடன்வாவா
நற்றாய்போல நயந்துநீவருவாய்
வருவீரசா வல்லிடும்பேசா
மேலைமலைக்குத் விண்ணிடும்பேசா
சோலைமலைக்குத் தோன்றிடும்வாசா
பழனியில்வாசா பங்கயநேசா
அரகராவென்றவுடன் அடியனைரட்சி
கடம்பாவென்றிட காத்துநீரக்ஷி

இடும்பாவென்றே னென்றன்முன்வருவாய்
குற்றமிருப்பினுங் கோபங்கொள்ளாய்
அடங்காசத்துருவை அக்கினிமூட்டிடும்
அடங்காதபேரை அடைத்துவாயடைத்திடும்
இணங்காதபேரை யெடுத்துமறித்திடும்
வணங்காதபேரை வாளாலறுத்திடும்
ஆங்காரசொரூபா யடியடிபிடிபிடி
இடுஇடுசுடுசுடு இதுவேசமயம்
இதுவேசமய மென்றன்முன்வருவாய்
கடம்பாசரணம் கதிர்வேலாசரணம்
இடும்பாசரணம் ஈசாசரணம்
ஷண்முகத்தூதா சரணஞ்சரணம்
சரணம் சரணம் தற்காத்தருளே.

இடும்பன் கவசம் முற்றிற்று.

கடம்பன் கவசம்.

காப்பு.

கல்வி குணஞானங் கருணைபொறை யீகையலர்ச்
செல்வி யருளெல்லாஞ் சிறக்கவே - நல்ல
கடப்பொழியு மும்மதத்தக் காரானை வாழ்த்தி
கடம்பன் கவசங் கழறு.

நூல்.

முருகமுருக முருகமுருக
சரவணபவசிவ சண்முகமுருக
செந்திநகரிற் செறிந்திடுமுருக
திருப்பரங்குன்றிற் றிகழுமுருக
பழனிமலையிற் பயின்றமுருக
வரகமதனி லியங்குமுருக
பழமுதிர்சோலையிற் பயிலுமுருக
குன்றக்குடியிற் குலாவியமுருக

திருவுருமாமலை சிறந்தமுருக
திருமலையதனிற் றிகழுறுமுருக
வள்ளியூரதனில் வழங்குமுருக
கழுகுமலையிற கனிந்தமுருக
வாசகிரியில் வதிந்தமுருக
விலஞ்சிமூரானில் மிளிருமுருக
வேள்விமாமலை வேட்டமுருக
அடிப்பாடதனி லமர்ந்தமுருக
சிவகிரியதனிற செய்யமுருக
மேட்டுக்குடியினில் மேம்படுமுருக
எண்கனூரினி லெழுந்தமுருக
விராலிமலையினில் விளங்குமுருக
மயிலாசலத்தினில் மகிழ்ந்தமுருக
தணிகையதனில் சார்ந்திடுமுருக
போரூரதனிற் பொருந்தியமுருக
வேங்கடமதனில் விராவுமுருகா
சத்திமலையிற் றங்கியமுருக
நட்சத்திரமலை நண்ணியமுருக
அருணாசலமதி லழகியமுருக
சோமாசினியிற் றோன்றியமுருக
அவனூர்தன்னி லார்ந்தமுருக
சித்தர்மாமலை சிறக்குமுருக
வேலுடைய பட்டினம் விருப்புமுருக
பேறைநகரிற் பிறங்கிடுமுருக
பூண்டியதனில் பொலிந்தமுருக
உடுப்பையதனை யுகந்தமுருக
கதிர்காமத்தினிற் கலந்தமுருக
பலகலையதனிற் பயிலுமுருக
அடியார்மனதி லடைந்தமுருக
ஏகாட்சரமா யேய்ந்தமுருக
பஞ்சாட்சரமாய் பதித்தமுருக

சடாட்சரமாக சமைந்தமுருக
அஷ்டாட்சரமா யமைந்தமுருக
பதார்த்தமூன்றெனப் பகுத்தமுருக
ாதி நீயலவெனப் பகர்ந்தமுருக
பசுவின்செயலைப் பணித்தமுருக
பாசமொழிக்கப் பயன்சொலுமுருக
ஆணவவினையை யகற்றிடுமுருக
காமியச்செயலைக் கலக்கிடுமுருக
மாயையின்றொழிலை மறித்திடுமுருக
ஓம்ஓம்ஓம்ஓம் ஓங்காரமுருக
ரீங்ரீங்ரீங்ரீங் ரீங்காரமுருகா
ஐயுங்கிலியு மாகியமுருக
ஔவும்சவ்வு மானமுருக
சசசசசரஹணபவ பவவோம்முருக
ரரரரரஹணபவ வசவோம்முருக
ஹஹஹஹஹணபவ சரவோம்முருக
ணணணணணபவச ரஹவோம்முருக
பபபபபகசர ஹணவோம்முருக
வவவவவசரஹ ணபவோம்முருக
பில்லிசூனியத்தைப் பிரித்திடுமுருக
குட்டிமோகினியைக் குலைத்திடுமுருக
காளிவோங்காளியைக் கழித்திடுமுருக
கறுப்பன்வீரப்பனைக் கடிந்தமுருக
இடாகினிதன்னை யெறித்திடுமுருக
துஷ்டதேவதைகளைத் தொலைத்திடுமுருக
தலைவலிகண்ணோய்த் தவிர்த்திடுமுருக
குன்மநோயதனைக் கோறியமுருக
பீனிசவலியைப் பெயர்த்திடுமுருக
வாதபித்தத்தை வதைத்தமுருக
சன்னிகாமாலையைச் சதைத்தமுருக
மூலரோகத்தை முறித்தமுருக

பவுத்திரசோகையைப் பதைத்திடு முருக
சூலைக்கிரந்தியைச் சுழற்றிடு முருக
சிவயநமவென சிவன்றரு முருக
வயநமசியெனும் வரனருள் முருக
யநமசிவவெனும் மதிதரு முருக
நமசிவயவெனும் நலன்றரு முருக
மசிவயநவெனும் மறைதரு முருக
அர அர அர அர அர அர முருக
அரி அரி அரி அரி அரி அரி முருக
ஆறுமுகங்களான முருக
அயிலுஞ்சேவலு மணிந்தமுருக
வெண்டிருநீறு விளங்கிடு முருக
தையலார்வலையைத் தடுத்தாள் முருக
நாடகமயின்மிசை நடமிடு முருக
மான்மகள்கோன்மகள் மணந்தமுருக
முதற்குருவாகி முளைத்த முருக
புண்ணியவடிவாய்ப் பொலிந்தமுருக
தாயினுமினிய சாமியா முருக
என்பொருளாவியை யேற்ற முருக
வேதாகமங்கள் விளம்பிய முருக
ஊரும்பேரு மொழிந்த முருக
பல்லுலகதனிற் பதிந்தமுருக
நோக்காலென்னை நோக்கின முருக
சோதிரூபமாய்த் தோன்றியமுருக
பூதிசாதனம் புரிந்த முருக
சும்மாயிருவெனச் சொல்லிய முருக
கந்த முருக கடம்ப முருக
காக்க முருக காக்க முருக
வாழ்க முருக வாழ்க முருக
முருக முருக முருக முருகனே.

கடம்பன் கவசம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அகத்தியப் பஞ்சகம்.

குகனேவருக களங்கமிலாக்
கோனேவருக கறைமிடற்ரூன்
மகனேவருக மனம்பூத்த
மலரேவருக வோராறு
முகனேவருக சிவானந்த
முதலேவருக வடியாரின்
அகனேவருக பழனிமலை
யரசேவருக வருகவே
கந்தாசரணம் மயில்வேறசெங்
கரனேசரணங் காமாரி
மைந்தாசரணஞ் செந்திருமான்
மருகாசரணம் வறியேன்றன்
சிந்தாகுலந்தீர்த் தருள்செய்யுஞ்
சேயேசரண மெனைக்காக்கும்
எந்தாய்சரணம் பழனிமலை
யிறைவாசரணம் சரணமே
சிவமே போற்றி சிற்சபையோன்
செல்வாபோற்றி கௌமாரர்
தவமேபோற்றி விண் ணுலகத்
தலைவாபோற்றி என்போல்வார்
பவமேயொழிக்க வந்தருளும்
பதியேபோற்றி யந்நாளில்
அவமேபொடித்த பழனிமலை
யண்ணுபோற்றி போற்றியே
நாதாதருக நலமெல்லா

நண்பேதருக வுனைவேண்ட
போகாதருக மெய்ஞ்ஞானம்
புனிதாதருக கருணைபொறை
தாதா தருக கல்விகுணம்
தாயையேதருக கேட்டவெலாம்
ஈதாவெனுமுன் பழனிமலை
யிறைவாதருக தருகவே
கூர்வேல்வாழி தேவர்தொழுங்
குமரன்வாழி நடனமயில்
சீர்மான்வாழி வலனுயர்த்த
சேவல்வாழி வள்ளிதெய்வப்
பேர்மான்வாழி பேசரிய
பெரியோர்வாழி செஞ்சாலி
ஆர்வண் பண்ணைப் பழனிமலை
யப்பன்வாழி வாழியவே.

அகத்தியப் பஞ்சகம் முற்றிற்று.

பஞ்சாட்சரம் ஜபிக்க.

ந	ம	சி	வ	ய
ம	சி	வ	ய	ந
சி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	சி
ய	ந	ம	சி	வ

D:87
N33

இந்த சக்காத்தை வெள்ளி, செப்பு, அல்லது தங்க தகட்டிலாவது வரைந்து கலை ஆசனத்தின்மேல் கிழக்கு திசைநோக்கி உட்கார்ந்து மேற்கண்ட சக்கரத்தை எழுதி 15-நாள் பூஜையில் வைக்கவும்.

பிறகு தங்கத்தினுல் தாயத்துசெய்து மேற்சொன்ன சக்காத்தை அதில் அடக்கம்செய்து ஓர் தாம்பாளத்தில் விபூதிவைத்து அதன்மேல் மேற்படி ரட்சையை வைத்து உருத்திருட்சர மணியினுல் 1008-தரம் ஜபிக்க சகலமும் சித்தியாகும்.

சர்வ தேவதா வசிய மலையாள மாந்திரீக போதினி என்னும்
மணி மந்திரக் கொத்து சம்பூரணம்.

78084

திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

அருமையான நூல்! இதுகாறும் வெளிவராதது!!

பலவித கைத்தொழில் முறைகளை
யாவரும்செய்து ஜீவிக்க இதுவே நல்ல தருணம்
ஜீவன உற்பத்தி என்னும் ஓர் புதிய

கைத்தொழில்
வணிக சாஸ்திரம்.

1000-முறைகள் அடங்கியது.

விலை ரூபா ஒன்று. தபாற்கூலி வேறு.



இரத்கினுதிகள், தங்கம், பொன் வெள்ளி நகைகள் சுத்தி செய்யு முறை உடைந்த பீங்கான் கண்ணாடி இவைகளை ஒட்டு முறைகள் பலவித ஜர்மன் சில்லர் சாமான்கள், பிஸ்கத், டூத்பவுடர், வெண்ணை நெய் எண்ணை வாசனை திரவியம் பலதினுசுகள், மூக்குத்தூள், பலவிதமான வார்ணிசுகள், பர்னிசர்ஸ் சாமான்கள் இரும்பு செம்பு பித்தளை இவைகளையும், ஓட்டை, உடைச்சல், துவாரம் விழுந்த சாமான்களும், ஒட்டுமுறைகளும் சாமான்களுக்கு பாலீஷ் செய்யும் முறைகள் இன்னும் பலவிதமான சுமார் 1000 முறைகளடங்கியதும் மருந்துகள் பஸ்பம் லேகியம் சூரணம் எண்ணை பாகசாஸ்திரங்கள் பலவித கைத்தொழில் தமிழ் கட்போஸ் செய்யும்முறை இங்கிலீஷ்கம்போசு செய்யும்முறைகள் அதற்குண்டான இங்கி மை பேர் ரப்பர்ஸ்டாம்பு செய்யுமுறைகள் பயிண்டுவேலை செய்யுமுறைகள் பலவித கைத்தொழில் முறைகள் அடங்கியது.

என். கணபதி புத்தகசாலை,
நெ. 33, நம்புலையர் வீதி,
சௌகார் பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஜீவன உற்பத்தி என்னும்

கைத்தொழில் வணிக சாஸ்திரம்

விலை ரூபா 1—0—0.

(தபால் சிலவு வேறு)

இந்நூல் கிடைக்குமிடம் :—

என். தணிகாசலம் அண்டு கம்பெனி,

நெ. 33, நம்புலையர் வீதி,

ம த ரு ஸ்.